சுருக்கம்

தொழில் துறை – தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் – காகிதம் மற்றும் காகித அட்டையிலிருந்து விலை மதிப்புக் கூட்டிய பொருள்களை உற்பத்தி செய்யும் மையம் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**தொழில் (எம்.ஐ.டி.2)துறை**

**அரசாணை (டி) எண்: 107** **நாள்: 25.07.2014**
**ஜய, ஆடி 9,**
**திருவள்ளுவர் ஆண்டு –2045**

**ஆணை:**

24.07.2014 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் தொடர்பான கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள்:-

"தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் மூலம் திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில், இரு புறமும் மேற்பூச்சு செய்யப்பட்ட அடுக்கு காகித அட்டை தயாரிக்கும் புதிய ஆலை ஒன்று 1,200 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 2,000 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பினை உருவாக்கும் வகையில் நிறுவப்படும் என இந்த மாமன்றத்தில் 07.05.2013 அன்று நான் அறிவித்தேன். அந்த ஆலையை நிறுவிடும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் உற்பத்தி செய்யும் காகிதம் மற்றும் அடுக்கு காகித அட்டையிலிருந்து, விலை மதிப்பு கூட்டிய பொருட்களை உற்பத்தி செய்யும் மையம் ஒன்று கரூர் மாவட்டம், மாயனூரில் 38.40 ஏக்கர் பரப்பளவில் , 40 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மையத்தில், நோட்டுப்புத்தகம், பாடப்புத்தகம், சிறிய அட்டை பெட்டி தயார் செய்தல் போன்ற காகிதம் மற்றும் அடுக்கு காகித அட்டை சார்ந்த சுமார் 15 தொழிற்கூடங்கள் அமையப்பெற்று சுமார் 500 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு கிடைக்கும்."

2. மேற்கண்ட திட்டத்தினை தனது சொந்த நிதியிலிருந்தே குறிப்பிட்ட கால அளவிற்குள் நடைமுறைப்படுத்தவும் மற்றும் இத்திட்டத்தின் முன்னேற்றம் குறித்து மாதந்தோறும் அரசிற்கு அறிக்கை அனுப்புமாறும் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தை அரசு பணிக்கிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ச. வி. சங்கர்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும்
காகித நிறுவனம்,
கிண்டி, சென்னை– 32
நகல்:
தொழில் (வசெதி) துறை, சென்னை – 9
சிறப்புத் திட்டங்கள் மற்றும்
அமலாக்கத் துறை,
சென்னை– 9
கோப்பு நகல்/உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்